**செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களது செயல்முறைகள்**
**முன்னிலை: திரு.அ.ஜான்லூயிஸ், இ.ஆ.ப.,**

**ந.க..எண்.396/2019 பேரூ1** **நாள். 08.09.2020**

பொருள்: பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – காஞ்சிபுரம் மண்டலம் செங்கல்பட்டு மாவட்டம் – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் பணி நியமனம் செய்தது கருங்குழி பேரூராட்சி – வரித்தண்டலராக பணிபுரிந்து வரும் குமரவேல் (திரு).மு. என்பவரின் பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:
1. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை கடித எண் 1288/PSD -C3/2019 நாள் 13.02.2019.
2. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.396/2019/பேரூ2 நாள் 07.03.2019
3. கருங்குழி பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதம் ந.க.எண்.59/2019 நாள்:28.08.2020
4. இதர தொடர்புடைய ஆவணங்கள்.

//*******//

**உத்தரவு**

காஞ்சிபுரம் மண்டலம், செங்கல்பட்டு மாவட்டம், கருங்குழி பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிபுரிந்து வரும் திரு.மு.குமரவேல் என்பவர் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி–IV தேர்வில் தேர்வு செய்யப்பட்டு, பார்வை 1–ல் காணும் உத்திரவின் படி, ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டம், பேரூராட்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டார். பார்வை 2–ல் காணும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்திரவின்படி, தற்போதைய செங்கல்பட்டு மாவட்டம், கருங்குழி பேரூராட்சியில் காலியாக உள்ள வரித்தண்டலர் பணியிடத்தில் தனியருக்கு பணியிடம் வழங்கப்பட்டு, தனியர் 08.03.2019 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து நாளது வரை பணிபுரிந்து வருகிறார்.

| வ. எண். | பணியாளர் பெயர் பதவி மற்றும் பணிபுரிந்து வரும் பேரூராட்சி | பணியில் இணைந்த நாள் | பணி வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திரு. மு.குமரவேல்<br>வரித்தண்டலர், கருங்குழி பேரூராட்சி. | 08.03.2019<br>மு.ப | 08.03.2019<br>மு.ப |

2. தனியரின் பணியினை வரித்தண்டலர் பணியிடத்தில் வரன்முறை செய்யும் பொருட்டு, பார்வை 3–ல் காணும் பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து வரப்பெற்ற கருத்துரு பரிசீலிக்கப்பட்டு, மேற்காணும் பணியாளருக்கு அவர் பணியில் இணைந்த நாளான 08.03.2019 முற்பகல் முதல் வரித்தண்டலர் பணியிடத்தில் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

3. மேற்குறிப்பிட்ட பணியாளருக்கு பணிவரன்முறை செய்த விபரத்தினை பணிப்பதிவேட்டில் பதிவு செய்து அதன் ஒளிநகலினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/– அ.ஜான்லூயிஸ், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
செங்கல்பட்டு மாவட்டம்.

பெறுநர் :
திரு மு.குமரவேல்
வரித்தண்டலர்,
கருங்குழி பேரூராட்சி. (செயல் அலுவலர் மூலமாக)

நகல் :
1. பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை –28 அவர்களின் தகவலுக்காக.
2. செயல் அலுவலர், கருங்குழி பேரூராட்சி, செங்கல்பட்டு மாவட்டம்.
3. 'பேரூ1' இருக்கை இருப்பு கோப்பு.

//உத்திரவு படி//

8.9.20

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் (பொ)